### டிபிகேஎல் அதிகாரிகள் - பலூன் வியாபாரி

# இடையே கைகலப்பு

## ஐவரிடமிருந்து வாக்குமூலம் பதிவு



**கோலாலம்பூர், மார்ச் 31-**

வெள்ளிக்கிழமை இரவு கோலாலம்பூர் ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மானில் கோலாலம்பூர் மாநகர் மன்ற (டிபிகேஎல்) அதிகாரிகளுக்கும் பலூன் வியாபாரி ஒருவருக்கும் இடையே நிகழ்ந்த கைகலப்பு தொடர்பில் ஐந்து நபர்களிடமிருந்து போலீசார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

ஆயினும், இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று டாங் வாங்கி போலீஸ் தலைவர் சுலிஸ்மி அஃபெண்டி சுலைமான் நேற்று தெரிவித்தார். அச்சம்பவத்தை நேரடியாகக் கண்ட நபர்களிடமிருந்து பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலங்களையும் சிசிடிவி கேமரா பதிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு போலீசார் தங்களின் புலன்விசாரணையை நடத்தி வருகின்றனர். அது முடிவடையும் தறுவாயில் உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

பொதுநிகழ்ச்சியில் அரசு ஊழியர் ஒருவரை கடமையாற்ற விடாமல் இடையூறு செய்தவர்களைக் கையாளக்கூடிய தண்டனைச் சட்டம் 186ஆவது பிரிவின் கீழ் அந்த விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

பக்கம் 13

## டிபிகேஎல்....

சம்பந்தப்பட்ட அந்த பலூன் வியாபாரியின் குடும்பத்தினரும் போலீசில் புகார்செய்துள்ளனர் என்றும் சுலிஸ்மி குறிப்பிட்டார்.

பலூன் வியாபாரி ஒருவருடன் கைகலப்பில் ஈடுபடும் டிபிகேஎல் அதிகாரிகள் கடைசியில் அந்நபரை தரையோடு அழுத்திப் பிடிக்கும் காட்சி அடங்கிய காணொளியொன்று நேற்றுமுன்தினம் வெளியாகியிருந்தது.

அந்த பலூன் வியாபாரி அதிகாரிகளின் உத்தரவுகளை மதிக்காமல் ஆவேசமாக நடந்துகொண்டதாக மாநகர் மன்றம் பின்னர் வெளியிட்ட அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது.